பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 02 2025 **SUNDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டு மக்கள் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்திற்கும் காசிக்கும் இடையேயான பழமையான உறவை கொண்டாடும் வகையில் காசி தமிழ் சங்கமம் அமைந்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. தில்லி சட்டப்பேரவை கூட்டத்தொடரில் கணக்கு தணிக்கை துறையின் அறிக்கை தாக்கல் செய்யப்படுவது முக்கிய அம்சமாக இருக்கும் என்று தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

4. வழக்கறிஞர் சட்டதிருத்த மசோதாவை மத்திய அரசு முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5. உகாண்டா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மன்ராஜ் சிங் பட்டம் வென்றார்.

>>>>>>><<<<<<<

நாட்டு மக்கள் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டத்தில் அமையவுள்ள பாகேஷ்வர்தாம் மருத்துவம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி வைத்து அவர் பேசினார்.

சமூகத்தில் நலிவடைந்த நிலையில் உள்ள புற்றுநோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் நோக்கில் இது அமையவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

நவீன உபகரணங்கள், மருத்துவ நிபுணர்களை கொண்டதாக இங்கு அமைக்கப்படும் புற்றுநோய் மருத்துவமனை திகழும் என்று அவர் கூறினார்.

பட்ஜெட்டில் குறிப்பிட்டவாறு, நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அடுத்த 3 ஆண்டுகளில் புற்றுநோய் பராமரிப்பு நிலையங்கள் திறக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

புற்றுநோய்க்கான மருந்துகள் குறைந்த விலையில் கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டம் மற்றும் மக்கள் மருந்தகங்கள் உள்ளிட்டவற்றின் சிறப்பு அம்சங்களை மக்கள் அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

நமது முன்னோர்கள் பின்பற்றிய ஆயுர்வேத மருத்துவம் மற்றும் யோகா ஆகியன இன்று உலகம் முழுவதும் பின்பற்றப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நமது கோவில்கள் வழிபாட்டு தலமாக மட்டுமல்லாமல், அறிவியல் மற்றும் சமூக உணர்வின் மையங்களாகவும், திகழ்வதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இன்று மாலை போபாலில் நடைபெறும் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<<

தமிழகத்திற்கும் காசிக்கும் இடையேயான பழமையான உறவை கொண்டாடும் வகையில் காசி தமிழ் சங்கமம் அமைந்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வாரணாசியில், ஹிந்து பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் கலாச்சார மையமாக காசி நகரம் திகழ்வதாக கூறினார்.

பல்வேறு கலாச்சாரங்களை கொண்டிருந்த போதும், வேற்றுமையில் ஒற்றுமை என்பதை நாடு தொடர்ந்து பிரதிபலித்து வருவதாக அவர் குறிப்பிட்டார். பாரம்பரியம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இரண்டையும் சார்ந்து நாடு கட்டமைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். ஸ்மார்ட் ஃபோன் உள்ளிட்ட டிஜிட்டல் தொழில்நுட்பங்களை நாட்டில் உள்ள அனைவரும் பயன்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளின் தூதர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றிருப்பதாகவும், இந்தியாவைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்வதற்கான சிறப்பான வாய்ப்பை இந்நிகழ்ச்சி ஏற்படுத்தி தந்திருப்பதாகவும் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமை மற்றும் பொதுநலக் கொள்கைகள் மீது, தில்லி மக்கள் அளப்பரிய நம்பிக்கையை கொண்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா, அவரை சந்தித்துப் பேசிய நிலையில், தமது சமூகவலைதளப் பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தில்லி மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா செயல்படுவார் என்று திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்கையும், தில்லி முதலமைச்சர் இன்று சந்தித்து பேசினார்.

அவருக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட திரு. ராஜ்நாத் சிங், தில்லியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதில் திருமதி. ரேகா குப்தா முக்கியப் பங்கு வகிப்பார் என்று கூறினார்.

>>>>>><<<<<<<

தில்லி சட்டப்பேரவை கூட்டத்தொடரில் கணக்கு தணிக்கை துறையின் அறிக்கை தாக்கல் செய்யப்படுவது முக்கிய அம்சமாக இருக்கும் என்று தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

நாளை தொடங்கி மூன்று நாட்கள் தில்லி சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில் இன்று நடைபெற்ற பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாளை அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களும் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள் என்றும், அதனைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் மற்றும் துணைத்தலைவருக்கான தேர்தல் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

தில்லி மக்களை பாதிக்கும் முக்கியப் பிரச்சினை குறித்து விவாதிக்கும் வகையில் இந்த கூட்டத்தொடர் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முந்தைய ஆம் ஆத்மி அரசு திறனற்ற நிர்வாகத்தினால் நிதி பற்றாக்குறையை ஏற்படுத்தியிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

இருப்பினும், மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் விரிவான திட்டமிடலுடன் அமல்படுத்தப்படும் என்று திருமதி. ரேகா குப்தா உறுதியளித்தார்.

>>>>>><<<<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . .

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பக்தர்கள் பெருமளவில் பங்கேற்று வருகின்றனர்.

இன்று அதிகாலை முதல் மாலை 6 மணிவரை திரிவேணி சங்கமத்தில் 1 கோடியே 18 லட்சம் பேர் புனித நீராடியுள்ளனர்.

இதுவரை 61 கோடியே 61 லட்சம் பேர் புனித நீராடியுள்ளதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, பிரயாக்ராஜில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், தூய்மை இந்தியா திட்டம் தற்போது நாடுமுழுவதும் முதன்மை பெற்றுள்ளதாக கூறினார்.

உலக நாடுகள் இத்திட்டத்தினை வரவேற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், சனாதன தர்மத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பிரயாக்ராஜிற்கு வருகை தந்துள்ளதாக யோகி ஆதித்யநாத் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<<

மகா கும்பமேளாவை ஒட்டி, பிரயாக்ராஜின் பல்வேறு இடங்களில் இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த முகாம்களில் சுமார் ஆயிரத்து 500 கண் மருத்துவர்கள் மற்றும் கண் சிகிச்சை நிபுணர்கள் பங்கேற்றுள்ளதாகவும், சுமார் 2 லட்சத்து 20 ஆயிரம் பேர் கண் பரிசோதனை மேற்கொண்டதாகவும் உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில், ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அடுத்தகட்ட சிகிச்சைகள் பெற 15 ஆயிரம் பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<<<

வழக்கறிஞர் சட்டதிருத்த மசோதாவை மத்திய அரசு முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சட்டத் தொழிலின் தன்னாட்சியை உறுதி செய்யும் வகையில் இந்த மசோதா திரும்பப் பெற வேண்டும் என்று கோரியுள்ளார்.

>>>>>><<<<<<<

சட்டப்பேரவை நடவடிக்கைகளை டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளும் வகையில் புதுச்சேரி முதலமைச்சர் திரு. என். ரங்கசாமி, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கணினி பயிற்சி வழங்கும் திட்டத்தை இன்று தொடங்கி வைத்தார்.

சட்டப்பேரவை நடவடிக்கைகளில் டிஜிட்டல் வழியில் பங்கேற்பதற்கான மென்பொருள் குறித்து உறுப்பினர்களுக்கு இந்த பயிற்சியின் போது விளக்கம் அளிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் நடைபெறும் புதுச்சேரி பட்ஜெட் கூட்டத்தொடர் முழுமையாக டிஜிட்டல்முறையில் மேற்கொள்ளப்படவிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

வெப்ப மண்டல புயலால் பாதிக்கப்பட்டுள்ள **Honduras** நாட்டிற்கு மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், **Sara** புயலால் பாதிக்கப்பட்டுள்ள அந்நாட்டிற்கு 26 டன் மருந்து பொருட்கள் மற்றும் பேரிடர் மீட்புக்கான உபகரணங்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மன்ராஜ் சிங் பட்டம் வென்றார். ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-10, 17-21, 21-18 என்ற செட்கணக்கில் அஜர்பைஜானின் **Dicky Dwi Pangestu-**வை வென்றார்.

----------

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 242 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் இந்தியா சற்றுமுன் வரை 6 ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 32 ரன் எடுத்துள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முன்னதாக விளையாடிய பாகிஸ்தான் 49 புள்ளி 4 ஓவரில் 241 ரன் எடுத்தது.

இந்தியாவின் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளையும், ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பாகிஸ்தானின் **Saud Shakeel** அதிகபட்சமாக 62 ரன் எடுத்தார்.

**>>>>>>END<<<<<<<**